# மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையின்
# 2022-2023-ம் நிதி ஆண்டு வருடாந்திர திட்ட அறிக்கை

**(Annual Plan)**

அரசாணை (எம்.எஸ்) எண்.57, தொழில் (எம்.எம்.டி.1) துறை, நாள்.19.05.2017, அரசாணை (எம்.எஸ்) எண்.90, தொழில் (எம்.எம்.டி.1) துறை, நாள்.27.07.2017 மற்றும் அரசாணை (எம்.எஸ்) எண்.81, தொழில் (எம்.எம்.டி.1) துறை, நாள்.14.08.2018-ன்படி உருவாக்கப்பட்ட தமிழ்நாடு மாவட்ட கனிம கட்டமைப்பு விதிகள் 2017-ன்படி மதுரை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க. எண்.764/2017-கனிமம், நாள்.12.09.2017-ன்படி உருவாக்கப்பட்டு அதன்பின்னர் அரசாணை எண்.35, தொழில் (எம்எம்டி.1) துறை, நாள்.11.03.2022-க்கிணங்க, மதுரை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க.எண்.578/கனிமம்/2022, நாள்.03.11.2022-ன்படி கீழ்க்குறிப்பிட்டுள்ள அலுவலர்களை உறுப்பினர்களாகக் கொண்டு மறுசீரமைக்கப்பட்டு தல்லாகுளம் சார் பதிவாளர் அலுவலக ஆவண எண்.260/2022/BK4, நாள்.02.12.20322-ன்படி பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | நிர்வாகக் குழு அமைப்பு | வ. எண் | மேலாண்மைக் குழு அமைப்பு |
|---|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சியர், மதுரை | 1. | மாவட்ட ஆட்சியர், மதுரை |
| 2. | மாவட்ட வருவாய் அலுவலர், மதுரை | 2. | மாவட்ட வருவாய் அலுவலர், மதுரை |
| 3. | துணை / உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, மதுரை. | 3. | துணை / உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, மதுரை. |
| 4. | பாராளுமன்ற உறுப்பினர்கள்.<br>i. திரு.S.வெங்கடேசன், மதுரை<br>ii. திரு.B.மாணிக்கம் தாகூர், விருதுநகர்<br>iii. திரு.P.ரவீந்திரநாத், தேனி | 4. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மதுரை |
| 5. | சட்டமன்ற உறுப்பினர்கள்.<br>i. திரு.P.மூர்த்தி, மதுரை கிழக்கு<br>ii. திரு.P.T.R.பழனிவேல் தியாகராஜன், மதுரை மத்தி<br>iii. திரு.G.தளபதி, மதுரை வடக்கு<br>iv. திரு.M.பூமிநாதன், மதுரை தெற்கு<br>v. திரு.K.ராஜீ, மதுரை மேற்கு<br>vi. திரு.A.வெங்கடேசன், சோழவந்தான் | 5. | துணை இயக்குநர், (சுகாதாரம்), மதுரை |

| | | | |
|---|---|---|---|
| | vii. திரு.R.B.உதயகுமார், திருமங்கலம்<br>viii. திரு.V.V.ராஜன் செல்லப்பா, திருப்பரங்குன்றம்<br>ix. திரு.பெரியபுல்லான் @ செல்வம், மேலூர்<br>x. திரு.P.அய்யப்பன், உசிலம்பட்டி | | |
| 6. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மதுரை | 6. | முதன்மைக் கல்வி அலுவலர், மதுரை |
| 7. | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர், (வளர்ச்சி), மதுரை | 7. | மாவட்ட கருவூல அலுவலர், மதுரை |
| 8. | உதவி இயக்குநர் (பேரூராட்சி), மதுரை | 8. | மாவட்ட சமூக நல அலுவலர், மதுரை |
| 9. | மாவட்ட ஆதி திராவிட நல அலுவலர், மதுரை | 9. | உதவி இயக்குநர் (பஞ்சாயத்து), மதுரை |
| 10. | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், மதுரை | 10. | தி/எ். வாய்ஸ் டிரஸ்ட்,<br>தரைத்தளம், மாவட்ட ஆட்சியர் வளாகம், மதுரை |
| 11. | மாவட்ட வன அலுவலர், மதுரை | 11. | திரு. S. மலைச்சாமி,<br>3/423 - 4வது தெரு, ராயல் கார்டன், கருப்பாயூரணி, மதுரை - 625020 |
| 12. | முதன்மைப் பொறியாளர், பொ.ப.து, நீ.ஆ.அ, மதுரை | | |
| 13. | உதவி இயக்குநர், நில அளவை, மதுரை | | |
| 14. | மாவட்ட கருவூல அலுவலர், மதுரை | | |
| 15. | மாவட்ட சமூக நல அலுவலர், மதுரை | | |
| 16. | துணை இயக்குநர், (சுகாதாரம்), மதுரை | | |
| 17. | இணை இயக்குநர், (வேளாண்மை), மதுரை | | |
| 18. | தொழிலாளர் ஆய்வாளர், மதுரை | | |

மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளைக்காக, பாரத ஸ்டேட் வங்கி, வணிகவரி அலுவலக கிளையில் ஒரு வங்கிக் கணக்கு (கணக்கு எண்.37193268816) துவக்கப்பட்டு சிறு மற்றும் பெருங்கனிமங்களுக்கான உரிமக் கட்டணத்தின் அடிப்படையில் உரிய விதிகளின்படி மாவட்ட கனிம கட்டமைப்பிற்கான நிதி வசூலிக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு மாவட்ட கனிம கட்டமைப்பு விதிகள் 2017-ல், குவாரிகளால் பாதிக்கப்பட்ட பகுதிகள் மற்றும் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு அடிப்படை வசதிகளான பாதுகாக்கப்பட்ட குடிநீர், சுற்றுச்சூழல், சுகாதார வசதிகள், கல்வி வளர்ச்சித் திட்ட பணிகள்,

மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான நல்வாழ்வு திட்டம் மற்றும் இதர பணிகள் ஏற்படுத்திதருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் திட்டங்கள் தேர்வு செய்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மதுரை மாவட்டத்தில் 16 பெருங்கனிம சுரங்கக் குத்தகை உரிமங்களும், 68 சிறு கனிம குவாரி (96 கிரானைட் குவாரிகள் நீங்கலாக) குத்தகை உரிமங்களும் நடப்பிலுள்ளன. நடப்பிலுள்ள 16 பெருங்கனிம உரிமங்களும் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் இசைவு பெற்று சமர்ப்பிக்காத காரணத்தினாலும், வேறு சில காரணங்களுக்காகவும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மேலும் நடப்பிலுள்ள 68 சிறுகனிம குவாரி குத்தகை உரிமங்களுக்கு உரிமக் கட்டணத்தில் 10% தொகையும் கனிம அறக்கட்டளை நிதியாக வசூல் செய்யப்பட்டு வருகிறது.

2022-2023-ம் நிதியாண்டில் முதன்மை கல்வி அலுவலர், மதுரை அவர்களிடமிருந்து நரசிங்கம் பஞ்சாயத்தில் உள்ள பெண்கள் மாதிரி பள்ளிக் கட்டிடம் கட்டுவதற்கு ரூ.75,00,000/- (ரூபாய் எழுபத்து ஐந்து இலட்சம் மட்டும்) நிதி கோரப்பட்டுள்ளது. இந்நிலையில் மாவட்ட கனிம அறக்கட்டளை விதிகள் 2017-ன் விதி எண்.16(4)-ன்படி ஒரு நிதியாண்டில் ரூ.50,00,000/- வரையிலான திட்டப் பணிகளுக்கு மட்டுமே மாவட்ட ஆட்சியர் அவர்களால் ஏற்பளிப்பு செய்ய இயலும் என்பதால் தலைவர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க.எண்.578/கனிமம் /2022, நாள்.01.12.2022-ன்படி ரூ.75,00,000/- (ரூபாய் எழுபத்து ஐந்து இலட்சம் மட்டும்) நிர்வாக ஒப்புதலும், அதிலிருந்து **ரூ.50,00,000/- (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்)** நிதி ஒப்புதலும் திட்ட இயக்குநர் / கூடுதல் ஆட்சியர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மதுரை அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் மாவட்ட கனிம அறக்கட்டளை விதிகள் 2017-ன் விதி எண்.16 (3)-ன்படி நிர்வாகக் குழு மற்றும் மேலாண்மை குழுவின் ஒப்புதல் பெறாமல் வழங்கப்படும் திட்டங்களுக்கு உடன் அடுத்து நடைபெறும் மேலாண்மை குழு கூட்டத்தின் ஒப்புதல் பெற வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டப் பணிக்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு வழங்க வேண்டிய

தொகையான ரூ.25,00,000/-(ரூபாய் இருபத்து ஐந்து லட்சம்)-ஐ வழங்குவது தொடர்பாக ஆணையர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, கிண்டி, சென்னை-32 அவர்களிடம் கருத்துரு அனுப்ப வேண்டியுள்ளது.

தமிழ்நாடு மாவட்ட கனிம கட்டமைப்பு நிதியினை 2020-2021 மற்றும் 2021-2022 நிதியாண்டிற்கு தணிக்கை செய்யும் பொருட்டு தணிக்கையாளர் நியமனம் செய்யப்பட வேண்டியுள்ளது.

இவ்வறிக்கையானது மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையின் நிர்வாகக் குழு மற்றும் மேலாண்மைக் குழு முன்பு சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் செய்யப்பட்டது.

தலைவர், மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு
அறக்கட்டளை / மாவட்ட ஆட்சித்தலைவர்,
மதுரை